OS 133/2013 DW1 - செல்வம்

த.பெ.மாயத்தேவர் தேதி 12.06.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு எழுதப்படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் A செடியூலில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் எனது அப்பா வாங்கிய சொத்துக்கள் ஆகும். தாவா சொத்தில் ரீ சர்வே எண்.39ல் உள்ள 3 ஏக்கர் 7 செண்டு நிலம் எனது அப்பாவும் எனது அம்மாவும் கிரையம் வாங்கியது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் A செடியூல் சொத்துக்களுக்கு நான்கு மால் தெரியுமா என்றால் தெரியும். இளையபெருமாள்தேவர் நிலத்திற்கு தெற்கே எனது தம்பி எமராஜா நிலத்திற்கு வடக்கே உள்ளது. எனக்கு நான்கு மால்கள் சரிவர தெரியாது என்றாலும் அதனால் தான் என்னால் நீதிமன்றத்தில் சரியாக சொல்லமுடியவில்லை என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் கிரையம் வாங்கிய சர்வே எண். 39ல் 53 செண்டும் 1971ம் ஆண்டு 1 ஏக்கர் 25 செண்டும் ஆக மொத்தம் ஒரு ஏக்கர் 76.5 செண்டு நிலத்தின் நான்கு மால்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது அம்மா 1961ம் ஆண்டு 52 செண்ட் நிலத்தையும் 26 செண்ட் நிலத்தையும் 1963ல் 51 செண்ட் மற்றும் 23 செண்ட் நிலத்தையும் ஆக மொத்தம் ஒரு ஏக்கர் 52 செண்ட் நிலத்தின் நான்கு மால் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2). எனது அம்மா இறந்த பிறகு மேற்படி சொத்துக்களை நானும் எனது தகப்பனார் மற்றும் எனது தம்பி ஆகியோர்கள் அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான். 27.02.1982ம் தேதி எனது தகப்பனார் வழக்கு சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை செய்து கொடுத்தார் அதில்

எனது தகப்பனாருக்கு 1 ஏக்கர் 97 செண்ட்டும் எனக்கும் வாதிக்கும் சேர்த்து 3 ஏக்கர் 7 செண்டு என பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மொத்தம் 5 ஏக்கர் நிலத்தில் நானும் எனது தம்பி எமராஜாவும் ஆளுக்கு சமமாக இரண்டரை ஏக்கர் பிரித்துக்கொண்டோம். எங்களுக்கு பிரித்து கொடுத்த சொத்தில் நானும் எனது தம்பியும் கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான்.

**S.d./Selvam**
**Taken down be me in open court**
**Read over to the witness in the**
**presence of accused and admitted**
**by HIM correct.**
**/Sd.G.Sathiya Narayanan, B.A., B.L.,**
**District Munsif cum Judicial Magistrate No.I,**
**Usilampatti.**